தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

பேச்சுப் போட்டி 09-06-2018 ஆண்டு:- நான்காம் வகுப்பு

## கல்வியின் சிறப்பு

அனைவருக்கும் எனது பணிவான வணக்கம்

செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அது ஈடு இணையிலாச் செல்வம். அதனால்தான் வள்ளுவர் "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்றார். கெடுதல் அல்லது அழிதல் இல்லாத செல்வம் கல்வி என்பதே இதன் பொருள். கல்வி அழிவில்லாதது மட்டுமல்ல; என்றும் நிலைத்து நிற்கக்கூடியது.

பிற செல்வங்கள் அழிந்து விடக்கூடியன. ஒருவரிடமுள்ள கல்வி வெள்ளத்தினால் அழியாது; நெருப்பினால் வேகாது; கள்வர்களால் கொள்ளையிடவும் முடியாது. கல்வி கொடுக்கக் கொடுக்கக் கூடும்.

கல்வி சிறப்புடையது. கல்வி கற்றவரும் சிறப்புடையவர். மன்னனுக்குத் தனது தேசத்தில் மட்டுமே சிறப்பு. கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. எனவே ஒரு மன்னனைவிடக் கற்றவர் சிறப்புடையவர். ஆகவே எல்லாச் செல்வங்களையும் விடக் கல்விச் செல்வமே உயர்ந்தது.

பிற செல்வங்களும் நமக்குத் தேவையானவையே. ஆனால் கல்வி இல்லாவிடின் பிற செல்வங்களால் பயனேதும் இல்லை. பிற செல்வங்களைத் தேடவும், அவற்றை நன்கு பயன்படுத்தவும் கல்வியே உதவுகின்றது.

கல்விச் செல்வத்தை இளமையிலேயே பெறுதல் நன்று. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பர். இளமையில் கற்றால் தொடர்ந்து எப்போதும் கற்கலாம். ஆகவே நாங்களும் இளமையிலேயே கல்விச் செல்வத்தைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்வோம்.